بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 04, July 2014 (Tamil)**

## ரமழானின் பயனை எப்படிப் பெறுவது?

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா பகராவின் 184 ஆவது வசனத்தை ஓதினார்கள் பிறகு அதன் பொருளைக் கூறினார்கள்.**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِن قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

**பொருள்: -**

''நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும், நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்வதற்காக அது கடமையாக்கப்பட்டிருக்கின்றது.'' (2: 184)

அல்லாஹ் முழுக்க முழுக்க தனது அருளால் நமக்கு மீண்டும் ஒருமுறை ரமலானை கடந்து செல்லும் நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறான். தனது எண்ணற்ற அருள்களைக் கொண்டு வருகின்ற இந்த மாதத்தைப் பற்றி அல்லாஹ், இதில் நோன்பு வைப்பது உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது எனக் கூறுகிறான். எதற்காக? காலையிலிருந்து மாலை வரை பசித்திருக்க வேண்டும் என்பதற்காகவா? இல்லை. மாறாக, நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக. உண்மையில் எண்ணற்ற அருள்களைக் கொண்டவர்களாக நம்மை ஆக்குவது இந்த இறையச்சம்தான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''நோன்பினால் பசித்திருக்க வேண்டும் என்பது மட்டும் நோக்கமல்ல; மாறாக இறைவனை நினைவு கூறுவதில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதை எப்போதும் நோன்பாளி மனதில் கொள்ள வேண்டும். அப்போதுதான் இறைவனிடம் உங்களை பணிவுடன் ஒப்படைத்து விட முடியும்; உலகத் தொடர்புகளிலிருந்து துண்டித்திருப்பது என்பது கிடைக்க முடியும்.''

இதன் கருத்து, இறைவனிடம் ஈடுபட்டிருத்தல், உலக ஆசைகளை புறந்தள்ளி விடுதல் என்பதாகும். அதாவது இந்த நாட்களில் எப்படிப்பட்ட நிலை இருக்க வேண்டுமென்றால், இதில் உலக ஆசைகளுடன் உள்ள தொடர்புகளை துண்டித்து விட்டு இறைவனுடைய திருப்திக்காக மட்டுமே எல்லா செயலும், முயற்சியும் இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

எனவே நோன்பின் நோக்கம், மனிதன் உடலை மட்டும் வளர்க்கின்ற ஓர் உணவை விட்டு விட்டு ஆன்மாவுக்கு ஆறுதலுக்கும், செழிப்புக்கும் காரணமாக இருக்கின்ற இன்னோர் உணவைப் பெற வேண்டும் என்பதாகும். மேலும் எவர்கள் இறைவனுக்காக மட்டும் நோன்பு வைக்கின்றார்களோ - வெறும் சம்பிரதாயத்திற்காக வைப்பதில்லையோ அவர்கள் ஹம்து (அல்ஹம்து லில்லாஹ்), தஸ்பீஹ் (சுப்ஹானல்லாஹ்), தஹ்லீல் (லா இலாஹ இல்லல்லாஹ்) ஆகியவற்றை ஓதுவதில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலமாக அவர்களுக்கு இன்னோர் உணவு கிடைக்கும்.''

எனவே ஒரு நம்பிக்கையாளர் முன்னரை விட அதிகமாக அல்லாஹ்வைப் புகழ வேண்டும்; இந்த நாட்களில் முன்னரை விட அதிகமாக அவனுடைய தூய்மையை எடுத்துரைக்க வேண்டும். அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் என்பதை ஏற்றுக் கொள்வது மட்டுமின்றி தனது

இறைவணக்கத்தின் தரத்தை மேலும் அதிகமாக உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நோன்பின் அருள் கிடைக்க முடியும்; அப்போதுதான் நீங்கள் இறையச்சத்தை மேற்கொண்டவாறு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தைப் பெற முடியும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:**

'' நோன்பு கேடயமாகும்; மேலும் அது நெருப்பிலிருந்து தப்பிப்பதற்கான உறுதியான கோட்டையாகும்.''

ஆனால் மனிதன் தனது ஒவ்வொரு செயலையும் அல்லாஹ்வுக்காக செய்யும்போதுதான், இறைவனுடைய திருப்தியைப் பெறுவதை தன் முன்னால் நிறுத்தும்போதுதான், இரவும் பகலும் துஆக்களிலும் இறைதியானத்திலும் ஈடுபடுவதில் முயற்சி செய்யும்போதுதான், இறையச்சத்தின்படி நடக்கும்போதுதான் நோன்பு நெருப்பிலிருந்து தப்பிப்பதற்கான உறுதியான கோட்டையாக மாறுகிறது. நமது இறைவன் மிகவும் அன்பு செலுத்தக் கூடிய இறைவன் ஆவான்; அவனுக்காக நாம் அர்ப்பணமாக வேண்டும். அவன் கூறுகிறான்: நான் ரமலானில் என் அடியாருக்கு மிக அருகில் வருகின்றேன். எனவே எவ்வளவு பயன் பெற முடியுமோ பயன் பெறுங்கள்; பொருட்டு இறையச்சத்தைப் பெறுவதற்காக நான் கூறிய வழிமுறைகளின்படி நீங்கள் செயல்பட முயற்சி செய்யுங்கள். இதிலிருந்து முழுமையயான முறையில் பயன் பெறுங்கள். அப்போது அது உங்கள் உலகத்தையும் மறுமையையும் அழகுபடுத்திக் கொள்பவர்களாக ஆக்கும். இதில் அல்லாஹ்வுக்காக கலப்பற்ற முறையில் செய்யப்பட்ட நன்மைகள் சாதாரண நாட்களில் செய்யப்பட்ட நன்மைகளை விட அதிக மடங்கு நற்கூலிக்கு உரியவர்களாக உங்களை ஆக்கக் கூடியதாகும்.

எனவே எனது கட்டளைகளுக்கேற்ப உங்களின் வணக்கங்களையும் அழகுபடுத்துங்கள். இந்த அழகுபடுத்துதலை இனி நாம் எப்போதும் நிலைபெறச் செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்ற உறுதிமொழியுடன் அழகுபடுத்துங்கள். எழுந்திருங்கள்; உங்கள் செயல்களையும் அழகுபடுத்துங்கள். அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப ஆக்குங்கள். இனி நாம் அவற்றை நமது வாழ்வின் அங்கமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆக்க முயற்சி செய்யுங்கள். எழுந்திருங்கள். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக எடுத்த உறுதிமொழியின் உண்மையான ஞானத்தை இந்த மாதத்தில் பெற முயற்சி செய்யுங்கள். இனி இதுதான் நமது வாழ்வாகும் என்ற சிந்தனையுடன் அதனைப் பெற முயற்சி செய்யுங்கள். وَلَا تَشْتَرُوا بِآيَاتِي ثَمَنًا قَلِيلًا وَإِيَّايَ فَاتَّقُونِ **(வலா தஷ்தரூ பிஆயாதீ ஸமனன் கலீலன். ஃபயிய்யாய ஃபத்தகூன்)** எனது வசனங்களுக்கு பதிலாக அற்ப விலையை வாங்காதீர்கள். எனக்கே அஞ்சுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையை எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள். அதாவது எனது விஷயங்களான மார்க்கத்திற்கு பதிலாக உலகத்திற்கு ஆசைப்படாதீர்கள். மார்க்கத்துடன் ஒப்பிடுகையில் உலகம் முற்றிலும் அற்பமானதாகும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். ஆக, இந்த சிந்தனைதான் நம்மில் ஒவ்வொருவரிடமும் உருவாக வேண்டும்; அப்போதுதான் நாம் ரமலானில் உண்மையான பயனைப் பெற முடியும்.

**சென்ற சில நாட்களுக்கு முன் இங்குள்ள மார்க்க கல்வியைக் கற்றுக் கொடுக்கும் ஒரு பேராசிரியர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றியும்,குலஃபாயே ராஷிதீன் பற்றியும் முட்டாள்தனமான பேச்சுகளைப் பேசினார்.** முஸ்லிம் ஆலிம்களுக்கு, அமைப்புகளின் தலைவர்களுக்கு, அரசாங்கத் தலைவர்களுக்கு தனது ஆற்றல்களைப் பெற வேண்டும் அல்லது பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற கவலை மட்டுமே இருக்கிறது. அந்த கவலையிலேயே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முட்டாள்தனமான விஷயங்களுக்கு எவராவது பதில் கூறக்கூடியவர்கள் இருகின்றார்கள் என்றால் - வாயடைக்கக் கூடியவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் தான். நாம் அவர்களுக்கு பதில் கூறினோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பொறாமையும், வெறுப்பும் கொண்டுள்ள இவர்கள்தான் இஸ்லாத்தின் எதிரிகளாவார்கள். இவர்கள் தற்போது ஒரு புதிய படத்தை ஆயத்தம் செய்துள்ளனர் என கேள்விப்படுகிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைப் பற்றிய அந்த படம் வாஷிங்டனிலும், பெர்லின், ஜெர்மனியிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நகைப்புக்குரியவர்களாக ஆக்க முடியும் என இவர்கள் கருதுகின்றனர். இவர்களின் உலகமும் நாசமாகக் கூடியதாகும்; மறுமையும் நாசமாகக் கூடியதாகும்.** இவர்களுக்கு தமது முடிவு தென்படுவதில்லை. ஆனால் இவர்கள் தமது தீய விளைவை சென்றடைவார்கள் என அல்லாஹ் கூறுகிறான்.

உலக அளவில் சட்டத்தின் வட்டத்திற்குள் இருந்தவாறு என்ன கண்டனம் செய்ய வேண்டுமோ அல்லது முயற்சி செய்ய வேண்டுமோ அது குறித்து நான் ஜெர்மனி ஜமாஅத்திற்கு கூறி விட்டேன். அமெரிக்காவிலுள்ள அஹ்மதிகளும் இதற்காக முழு முயற்சி செய்ய வேண்டுமென நேற்றுதான் எனக்கு தோன்றியது. ஆயினும் ஓர் அஹ்மதி தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டுள்ள உண்மையான அன்பு மற்றும் அன்னாரின் மகத்துவம், கண்ணியம் ஆகியவற்றை உயர்த்துவதை அளவற்ற சலவாத் ஓதுவதன் மூலம் செய்ய வேண்டும். **சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ சுப்ஹானல்லாஹில் அழீம். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ ஆலி முஹம்மத். உலகத்திலுள்ள ஒவ்வோர் அஹ்மதியும் இன்று இன்றைய சுற்றுச்சூழலையையும், ரமலானையும் சலவாத்தினால் நிரப்ப வேண்டும்.** எதிரிகள் அன்னாரின் கண்ணியத்தின் மீது தாக்குதல் செய்கின்றதற்கு இதுவே சரியான பதிலாக இருக்கின்றது. இதை விட சிறந்த பதில் வேறேதும் இருக்க முடியாது. அதே வேளையில் இதுவே அல்லாஹ்வைப் பற்றிய அச்சத்தை உருவாக்குகின்றதுமாகும். மேலும் இந்த இறையச்சம்தான், 'நல்ல முடிவு இறையச்சமுடையோருக்கே ஆகும்' என்ற செய்தியை அல்லாஹ்விடமிருந்து நமக்கு தந்து கொண்டிருக்கிறது. **அல்லாஹ் கூறுகிறான்:**

وَمَن يَتَّقِ اللَّهَ يَجْعَل لَّهُ مَخْرَجًا وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ وَمَن يَتَوَكَّلْ عَلَى اللَّهِ فَهُوَ حَسْبُهُ

**(வமன்ய் யத்தகில்லாஹ யஜ்அல் லஹூ மக்ரஜன்வ் வயர்ஸுகுஹூ மின் ஹய்ஸு லாயஹ்தஸிப். வமன்ய் யதவக்கல் அலல்லாஹி ஃபஹுவ ஹஸ்புஹூ)** எவர் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்வாரோ அல்லாஹ் அவருக்காக ஏதாவதொரு வழியினை உருவாக்கி விடுகின்றான். மேலும் அவர் நினைக்காத இடத்திலிருந்து அவருக்காக வாழ்வாதாரத்தை வழங்குகின்றான். மேலும் எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் போதுமானவனாவான். (திருக்குர்ஆன் 65:3,4)

இது தொடர்பாக **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'' நாம் இறையச்சத்திலும்,தூய்மையிலும் எதுவரை முன்னேற்றமடைந்துள்ளோம் என்பதை நாம் எப்போதும் நினைத்துப் பார்க்க வேண்டும். அதற்கான அளவுகோல் திருக்குர்ஆனாகும். **வமன்ய் யத்தகில்லாஹ யஜ்அல் லஹூ மக்ரஜன்வ் வயர்ஸுகுஹூ மின் ஹய்ஸு லாயஹ்தஸிப்** (எவர் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்வாரோ அல்லாஹ் அவருக்காக ஏதாவதொரு வழியினை உருவாக்கி விடுகின்றான்) என அல்லாஹ் கூறுவது போன்று, அல்லாஹ் இறையச்சமுடையவரின் அடையாளங்களுள் ஒன்றாக இதனையும் வைத்துள்ளான். அதாவது, அவரை உலகத்தின் விரும்பத்தகாதவற்றிலிருந்து அல்லாஹ் விடுதலை வழங்கி அவருடைய வேலைகளுக்கு அவனே பராமரிப்பவனாகி விடுகின்றான்.''

மேலும் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சுவாரோ அல்லாஹ் எல்லா துன்பங்களிலிருந்தும் அவருக்கு தப்பிப்பதற்கான வழியைத் திறந்து கொடுத்து விடுகின்றான். மேலும் அவர் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு அவருடை வாழ்வாதாரத்திற்கான வழிவகைகளை உருவாக்கிக் கொடுத்து விடுகிறான். அதாவது, இறையச்சமுடையவரின் ஓர் அடையாளம், அல்லாஹ் இறையச்சமுடையவரை அனாவசியமான தேவைகளுக்கு ஆளாக்குவதில்லை. உதாரணமாக, **ஒரு கடைக்காரர் ஏமாற்றாமல் தனது வேலை நடக்காது என நினைக்கின்றார். அதனால் அவர் ஏமாற்றம் செய்வதிலிருந்து விலகுவதில்லை. பொய் சொல்ல வேண்டிய கட்டாயத்தை அவர் எடுத்து வைக்கின்றார். ஆனால் இந்த விஷயம் ஒருபோதும் உண்மை அல்ல.** அல்லாஹ் இறையச்சமுடையவருக்கு, தானே பாதுகாவலனாகி விடுகின்றான். மேலும் உண்மைக்குப் புறம்பானவற்றில் அவரை கட்டாயப்படுத்தும் சந்தர்ப்பத்திலிருந்து அவரைக் காப்பாற்றுகிறான்.''

எனவே ஒருவர் உண்மையில் இறையச்சம் கொண்டவராக இருக்கின்றார் என்றால் - அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றார் என்றால் குறைந்தவற்றிலேயே அவருக்கு மன அமைதி கிடைத்து விடுகிறது. **தேவையில்லாத ஆசைகள் இல்லாதிருப்பதும் அல்லாஹ்வின் அருளில் உள்ள ஒன்றுதானே!** எனவே ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். **உலக இன்பங்களை, ஆசைகளை எந்த அளவு வரை வைப்பதற்கு அல்லாஹ் அனுமதி தந்துள்ளானோ அதே அளவுக்கு இருக்கும் வகையில் நாம் ரமலானில் நமது இறையச்சத்தின் தகுதியைக் கொண்டு வர**

**முயற்சி செய்ய வேண்டும்.** செல்வத்தைப் பெற்றாலும் இறையச்சத்தை முன் நிறுத்தியவாறு பெற வேண்டும். பிறகு அப்படிப்பட்ட செல்வந்தரான இறையச்சம் கொண்டவர் தனது செல்வத்தையும் இறை திருப்தியைப் பெறுவதற்காக செலவு செய்கின்றனர். மேலும் எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கும் இந்த ரமலானில் துஆ செய்யுங்கள். முஸ்லிம் உம்மத்திற்கு கருணை கிடைக்கவும் துஆ செய்ய்ங்கள். அல்லாஹ் தனது கருணையை காட்டியவாறு இவர்களுக்கு அறிவை வழங்குவனாக. எங்கெல்லால் அஹ்மதிகளின் மீது அநீதியிழைக்கப்படுகின்றதோ அந்த அநீதிகளிலிருந்து தப்பிப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அந்த அநீதிகளிலிருந்து அஹ்மதிகளை காப்பாற்றுவானாக. **எல்லாவற்றிக்கும் மேலாக அல்லாஹ் இந்த ரமலானில் நமக்கு உண்மையான இறையச்சத்தை வழக்குவானாக.** அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாக நாம் ஆவோமாக. அவனுடைய அருளினாலும் உதவியினாலும் மார்க்கத்தின் எதிரிகளையும், இஸ்லாத்தின் எதிரிகளையும் தோல்வியடைந்தவாறும் நஷ்டமடைந்தவாறும் காண்போமாக. அல்லாஹ் நம்மிடம் உண்மையான புரட்சியை உருவாக்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian** **Translated By *O.M. Muzzammil Ahmad***